# க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி

விரிவாக்கித் திருத்திய புதிய பதிப்பு

தமிழ் - தமிழ் - ஆங்கிலம்

- ‘கொடி’ என்பது தாவரத்தை மட்டும்தான் குறிக்குமா?

  — பெற்றோரிடம் பிள்ளை கேட்கும் கேள்வி இது

- ‘கயிறு’, ‘கயறு’ இரண்டில் எது சரி?

  — ஆசிரியரிடம் மாணவர்கள் கேட்கும் கேள்வி இது

- ‘நம்பிக்கை’, ‘சுற்றுச்சூழல்’

  — இவற்றை எப்படி விளக்கிச் சொல்வது?

  — ஆசிரியர் கேட்டுக்கொள்ளும் கேள்வி இது

- ‘காலகட்டம்’, ‘காலக்கட்டம்’

  — எப்படி எழுதுவது சரி?

  — எழுத்தாளருக்கு உள்ள குழப்பம் இது

- ‘மனம்திறந்து’

  — இதை எப்படி ஆங்கிலத்தில் சொல்வது?

  — மொழிபெயர்ப்பாளர் எதிர்கொள்ளும் சிக்கல் இது

இவைபோல் எழும் பல கேள்விகளுக்கான
விடையும் விளக்கமும் தரும்
ஒரே சாதனம்

**க்ரியாவின் தற்காலத்**
**தமிழ் அகராதி**

## இந்த அகராதி...

- தற்காலத் தமிழுக்கு என்றே உருவாக்கப்பட்ட முதல் அகராதி.
- தற்காலத் தமிழில் உள்ள சொற்களை எடுத்துக்காட்டு வாக்கியங்களோடு விளக்கும் முதல் அகராதி.
- தற்காலத் தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கிலச் சொல்/ விளக்கம் தந்திருக்கும் முதல் அகராதி.

## இந்தப் பதிப்பு...

- 1990க்குப் பிறகு தமிழ்ச் சொற்களில் நிகழ்ந்த மாற்றங்களைப் பதிவுசெய்யும் புதிய பதிப்பு.
- 75 லட்சம் தமிழ்ச் சொற்களைக் கொண்ட சொல்வங்கியின் உதவியுடன் உருவாக்கப்பட்ட புதிய பதிப்பு.
- தற்கால மொழியியல், அகராதியியல் அறிவையும் தற்காலத் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட புதிய பதிப்பு.
- தொடக்கம்முதல் இறுதிவரை எல்லாக் கட்டங்களிலும் கணிப்பொறியைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டிருக்கும் புதிய பதிப்பு.

## இதில்...

- 21,000 தலைச்சொற்கள்.
- 38,000 எடுத்துக்காட்டு வாக்கியங்கள்/தொடர்கள்.
- 1,700 இலங்கைத் தமிழ் வழக்குச் சொற்கள்.
- 342 சொற்களுக்கான படங்கள்.

அளவு 23cm x 15cm
பக்கங்கள் 1328+64
ISBN 978-81-85602-91-2
விலை ரூ. 495

க்ரியா / Cre-A:
H-18, ஃப்ளாட் எண் 3, தெற்கு அவென்யு, திருவான்மியூர், சென்னை 600 041
தொலைபேசி: 2441 2993/2441 1086 மின்னஞ்சல்: crea@vsnl.com www.crea.in

# அகராதிப் பதிவின் அமைப்பு

(1) தலைச்சொல்

**இதழ்** ¹ பெ. **1: (ஒற்றை வரிசையிலோ அடுக்காகவோ கொத்தாகவோ) பூக்களில் அமைந்திருக்கும் மெல்லிய ஏடு போன்ற பாகம்;**

(2) ஒத்த வடிவச் சொல்: தலை எண்

**கதை³** (g-) பெ. **(பழங்காலத்தில் பயன்படுத்தப்பட்ட)...**

(3) ஒலிக் குறிப்பு

(4) இலக்கணத் தகவல்

சொல் வகை

**உணர்** வி. (உணர, உணர்ந்து) **1: (உடலிலும் மனத்திலும் ஏற்படும் நிலையைப் புலன்களால்) அனுபவித்து அறிதல்;**

வினைத் திரிபு

**பய¹** (b-) வி. (பயந்து) (இறந்தகால வடிவங்கள் மட்டும்)...

**ஒண்ணு** வி. (ஒண்ணாத, ஒண்ணாது, ஒண்ணாமல் ஆகிய எதிர்மறை வடிவங்கள் மட்டும்)...

வினைத் திரிபுத் தகவல்

பெயர்ச்சொல் ஏற்கும் விகுதி பற்றிய தகவல்

**அழகு** பெ. (-ஆக, -ஆன) **1: கண்ணாலோ காதாலோ மனத்தாலோ அனுபவிக்கும் இனிமை அல்லது மகிழ்ச்சி;**

**கங்கு¹** பெ. முழுதும் தணலாக உள்ள கரித்துண்டு;...

(6) பொருள் விளக்கம்

**தட்டு**[1] வி. (தட்ட, தட்டி) **அ.** (ஒன்றை மற்றொன்றின் மீது படச் செய்தல் தொடர்பான வழக்கு) **1:** (பாராட்டுவது, உணர்வு பெறச் செய்வது, விரைவுபடுத்துவது முதலியவற்றுக்காகக் கையால்) மெதுவாக அடித்தல்; pat.

**பொருள் வகைப் பிரிவு**

**பொருள் வரிசை எண்**

**(7) ஆங்கிலப் பொருள்**

**துளிர்**[1] வி. (துளிர்க்க, துளிர்த்து) **1: ... இலை தோன்றுதல்;... முளைத்தல்;...** ரோஜாச் செடி துளிர்க்க ஆரம்பித்து விட்டது./ (உரு வ.) மனத்தில் நம்பிக்கை துளிர்த்தது.

**(8) எடுத்துக்காட்டு வாக்கியம்**

**நேர்பொருளின் விரிவைக் காட்டும் குறிப்பு**

**(5) வழக்குக் குறிப்பு**

- நடை
- துறை
- இடம்
- மதம்

**வினை** பெ. **1:** (உ.வ.) **செயல்; தொழில்;** act; work... **4:** (இலக்.) **வாக்கியத்தில் பயனிலையாக வருவதும்...**

**இலையான்** பெ. (இலங்.) **ஈ;** fly.

**திரித்துவம்** பெ. (கிறித்.) **தந்தை, மகன், தூய ஆவி ஆகிய மூவரும் ஒருமித்த நிலை;...**

பின்குறிப்பு: இங்கே கட்டங்களில் உள்ள தலைப்புகளின் முன் குறிக்கப்பட்டிருக்கும் எண்கள் **அகராதியைப் பயன்படுத்த உதவும் குறிப்புகள்** என்னும் பகுதியில் இதே தலைப்புகளுக்குத் தரப்பட்டிருப்பவையே. இந்தத் தலைப்புகளில் கூடுதல் செய்திகள் அந்தப் பகுதியில் உள்ளன.

**கமர்கட்டு** பெ. **வெல்லப்பாகில் தேங்காய்த் துருவலைப் போட்டுக் கிளறிச் சிறுசிறு உருண்டைகளாகப் பிடிக்கப்பட்ட, சற்றுக் கெட்டியான ஒரு வகைத் தின்பண்டம்;** small ball-shaped sweetmeat made by mixing coconut gratings in treacle.

**கமலகுண்டலமாக** வி.அ. *(இலங்.)* **தாறுமாறாக;** without order or regularity. *இவன் எடுத்த காரியமெல்லாம் கமலகுண்டலமாகப் போய் விட்டது./ கல்யாணத்திற்கு அடுத்த நாள் வீடெல்லாம் கமலகுண்டலமாகக் கிடந்தது.*

**கமலம்** பெ. *(உ.வ.)* **தாமரை;** lotus.

**கமலா ஆரஞ்சு** பெ. **(மலைப் பகுதிகளில் விளையும்) எளிதாக உரிக்கக்கூடிய, சிவந்த மஞ்சள் நிறத் தோலினுள் சுளைகளைக் கொண்ட பழம்;** a variety of orange having a loose jacket.

**கமலை** பெ. **அடிப்பகுதியில் நீண்ட தோல் பை இணைக்கப்பட்ட பெரிய தவலை போன்ற தகரச் சாதனத்தை நீண்ட கயிற்றால் மாடுகளோடு பிணைத்துக் கிணற்றிலிருந்து வயலுக்கு நீர் இறைக்கப் பயன்படும் அமைப்பு;** a device consisting of a cauldron-like vessel and bellows-like part attached at the bottom for lifting water from a well with oxen.

**கமழ்** வி. *(கமழ, கமழ்ந்து)* **(மணம்) நிறைந்திருத்தல்;** (of fragrance) be permeated with; be hung with. *ஊதுவத்தி மணம் கமழும் பூஜை அறை/ அருகில் நின்றிருந்தவரிடமிருந்து ஜவ்வாது மணம் கமழ்ந்தது./ (உரு வ.) தெய்வ மணம் கமழும் பாசுரங்கள்.*

**கமறல்** பெ. **எரிச்சலையும் இருமலையும் ஏற்படுத்தும் (மிளகாய் வற்றல், புகையிலை போன்றவற்றின்) நெடி;** pungent and irritating smell (of chillies, tobacco, etc.). *மிளகாய் வற்றலின் கமறல்.*

**கமறு** வி. *(கமற, கமறி)* **1: (தொண்டையில் நெடி தாக்குவதால் அல்லது நோயால்) லேசாக இரும வைக்கும் உணர்வு ஏற்படுதல்;** (of pungent smell, acrid things) cause irritation in the throat. *மிளகாய் வற்றல் வறுக்கும் போது வீட்டுக்குள் இருக்க முடியாத அளவுக்குக் கமறும்./ காலையிலிருந்தே தொண்டை கமறிக் கொண்டிருந்தது.* **2: (உணர்ச்சி மிகுதியால்) தொண்டை அடைத்தல்;** feel a lump in throat. *அப்பாவின் நோயைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தவனின் குரல் கமறியது.*

**கமீஸ்** பெ. **(பெண்கள் சுடிதாருடன் அணியும்) உடம்போடு ஒட்டியிருக்கும் வகையில் தோளிலிருந்து கால் மூட்டுவரை நீண்டிருக்கும், கை வைத்துத் தைத்த உடை;** kameez.

**கமுக்கம்-ஆக/-ஆன** வி.அ./பெ.அ. *(பே.வ.)* **வெளியே தெரியாதபடி/வெளியே தெரியாத;** secretively/secretive. *அடித்தாலும் எடுத்த பணத்தைப் பற்றி வாய்திறக்க மாட்டான், கமுக்கமான ஆள்!/ நகரின் இந்தப் பகுதியில் போதைப்பொருள் வியாபாரம் கமுக்கமாக நடைபெறுகிறது.*

**கமுகு** பெ. **பாக்கு மரம்;** areca (tree).

**கயமை** பெ. *(உ.வ.)* **(ஒருவரின் செயல், குணம் ஆகியவற்றைக் குறிக்கும்போது) மிகவும்**



**கமலை**

**படு**[1] வி. (பட, பட்டு) **அ.** (ஒன்றையொன்று தொட்டுக்கொண்டிருக்கும் விதத்தில் இருத்தல் தொடர்பான வழக்கு) **1: ஒரு பரப்பின் மீது வந்து அமைதல் அல்லது விழுதல்;** fall (on a surface); touch. *சூரிய வெளிச்சம் அவர் முகத்தில் பட்டது./ கொதிக்கும் எண்ணெய் பட்ட இடம் கொப்பளித்துவிட்டது./ தெரியாமல் கை பட்டதற்கு ஏன் கோபித்துக்கொள்கிறாய்?/* (உரு வ.) *அவளுடைய பார்வை தன் மேல் பட்டதை உணர்ந்தான்.* **2: (ஒன்றின் மீது) விசையுடன் விழுதல் அல்லது பதிதல்;** be struck by sth. *கல் பட்டுக் கண்ணாடி தூள்தூளாக நொறுங்கியது./ பல் பட்ட இடத்தில் இரத்தம் வந்தது./ ஜாக்கிரதை! கத்தி பட்டுவிடப்போகிறது.* **3: (ஒன்றில்) சிக்குதல்;** get caught. *வேட்டி முள்ளில் பட்டுக் கிழிந்துவிட்டது.* **ஆ.** (உண்டாதல் தொடர்பான வழக்கு) **4: (குறிப்பிட்ட எண்ணம்) உண்டாதல் அல்லது (மனத்தில்) தோன்றுதல்;** (of thoughts) occur. *உனக்கு எது முக்கியம் என்று படுகிறதோ அதைச் செய்./ என் மனத்தில் பட்டதைச் சொன்னேன்./ ஊரிலிருந்து எப்படியும் இன்று அப்பா வந்துவிடுவார் என்று எனக்குப் படுகிறது./ நீ சொல்வது சரி என்று எனக்குப் படவில்லை.* **5: தெரியவருதல்;** come across. *என் கண்ணில் யாரும் படவில்லை./ நான் கூட்டத்துக்குப் போனபோது அவர் என் கண்ணில் பட்டார்./ என் காதில் பட்டதை உன்னிடம் சொல்லிவிட்டேன்.* **6: (துன்பம், சிரமம் போன்றவற்றுக்கு) உள்ளாதல்; அனுபவித்தல்;** experience. *என் மகனைப் படிக்க வைக்க நான் பட்ட கஷ்டங்கள் கொஞ்சநஞ்சமல்ல./ படாத பாடு பட்டு, நான் சேர்த்த பணம் இது.*

**படு**[2] து.வி. (பட, பட்டு) **1: பெயர்ச்சொற்களோடும் வினையடிகளோடும் வினையெச்சங்களோடும் இணைந்து 'கொள்ளுதல்', 'அனுபவித்தல்' போன்ற பொருளில் அல்லது குறிப்பிட்ட செயல் முழுமை பெற்றிருப்பதைக் காட்டும் பொருளில் அவற்றை வினைப்படுத்தும் வினை;** auxiliary verb which functions as a verbalizer when added to certain nouns, verb bases, participles, in the sense of 'experience', 'subject to', etc. *துன்பப்படு/ பெருமைப்படு/ கர்வப்படு/ கோபப்படு/ பொறாமைப்படு/ உடைபடு/ வகுபடு/ மிதிபடு/ புரிபடு.* **2: ' செய' என்னும் வாய்பாட்டு வினையெச்சத்தின் பின் செயப்பாட்டு வினையின் தன்மையை உணர்த்தும் துணை வினை;** auxiliary verb which when added to an infinitive of a verb, functions as a passivizer. *விஷச் செடிகள் அழிக்கப்பட வேண்டும்./ கடைசி நாள் நடந்த போரில் துரியோதனன் கொல்லப்பட்டான்.* **3:** (உ.வ.) **பெரும்பாலும் 'அழிதல்' என்னும் பொருளைக் குறிக்கும் செயப்படுபொருள் குன்றிய வினைகளுடன் இணைந்து குறிப்பிட்ட செயல் முழுமை பெற்றிருப்பதைக் காட்டும் ஒரு துணை வினை;** auxiliary verb which when added to certain intransitive verbs, having the sense of ' destroy', indicating completion of an action. *அழிந்துபட்ட நாகரிகத்தின் எஞ்சிய சின்னங்கள்/ போரில் இறந்துபட்டவர்களுக்காகக் கட்டிய ஸ்தூபி.* **4:** (வ.வ.) **(எதிர்மறை வடிவத்தில்) 'கூடாது' என்னும் பொருளில் பயன்படுத்தும் துணை வினை;** when used in the negative படு functions as an auxiliary making a negative imperative. *யாரும் அவனைப் பற்றித் தப்பாகப் பேசப்படாது.*

**படு**[3] வி. (பட, பட்டு) **(தாவரங்கள்) வளர்ச்சி நிலை குறைந்து காய்ந்துபோதல்; வறண்டு உலர்ந்துபோதல்;** (of plants) become dry; wither. *செடி பட்டுப்போயிற்று.*

**படு**[4] வி. (படுக்க, படுத்து) **1: தூங்குவதற்காக அல்லது ஓய்வுக்காக உடலை ஒரு பரப்பின் மீது கிடத்துதல்;** lie down; go to bed. *ஏன் தரையில் படுத்திருக்கிறாய்?/ தெருவில் எருமை மாடுகள் படுத்துக்கிடந்தன./ யானை படுத்து நான் பார்த்ததில்லை./ அப்பா மதிய வேளையில் சிறிது நேரம் படுத்து ஓய்வெடுப்பது வழக்கம்./ அவள் விளக்கை அணைத்துவிட்டுப் படுக்கச் சென்றாள்./ வழக்கமாக எப்போது நீ படுப்பாய்?* **2: (ஒரு பொருளை) கிடைமட்டத்தில் வைத்தல்;** put sth. in a horizontal position; lay flat. *பலகையைத் தரையில் படுக்கப்போடு./ ஏணியை சுவர் ஓரமாகப் படுக்க வை.* **3:** (பே.வ.) **(ஒரு தொழில், திரைப்படம் முதலியவை) லாபகரமாக நடைபெற முடியாமல் போதல்;** (of a business, etc.) become a failure; fall flat. *வெளியாகிய முதல் வாரத்திலேயே திரைப்படம் படுத்துவிட்டது./ பறவைக் காய்ச்சல் பயம் காரணமாகக் கோழி வியாபாரம் படுத்துவிட்டது.*

**படு**[5] பெ.அ. **1: (குறிப்பிடப்படும்) தன்மையின் மிகுதியைக் காட்ட அல்லது தன்மையை வலியுறுத்திக் கூறப் பயன்படும் பெயரடை;** adjective used in the sense of 'extreme of sth.', '(hence) complete', 'utter', 'absolute', etc. *அவன் படு கில்லாடி/ அவர் படு கோழை.* **2: (கொலை, காயம் அல்லது தோல்வி முதலியவற்றைக் குறிக்கும்போது) மிக மோசமான;** word used as an intensifying adjective. *பட்டப்பகலில் படு கொலை/ விபத்தில் படு காயம்/ முதல் சுற்றிலேயே படு தோல்வி.*

**படு**[6] இ.சொ. **'மிகவும்' என்ற பொருளில் பயன்படுத்தப்படும் இடைச்சொல்;** particle used an intensifier in the sense of 'extreme of sth.'. *அவன் படு வேகமாக ஓடிவந்தான்./ படு மோசமான திரைப்படம்.*

## அகராதிக் குழு

**தலைவர்**

பேராசிரியர் இ. அண்ணாமலை

*(முன்னாள் இயக்குநர், இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர்; வருகைதரு பேராசிரியர், யேல் பல்கலைக்கழகம், அமெரிக்கா)*

**அகராதியை நெறிப்படுத்தியவர்கள்**

பேராசிரியர் இ. அண்ணாமலை

பேராசிரியர் அ. தாமோதரன்

*(முன்னாள் பேராசிரியர், தெற்காசிய ஆய்வு நிறுவனம், ஹைடல்பர்க் பல்கலைக்கழகம், ஜெர்மனி)*

**ஆசிரியர்**

எஸ். ராமகிருஷ்ணன்

*(பதிப்பாசிரியர், க்ரியா, சென்னை)*

**இணை ஆசிரியர்**

டி. கே. ரகுநாதன்

**துணை ஆசிரியர்**

தே. ஆசைத்தம்பி

**பதிவுகளைச் செம்மைப்படுத்த உதவியவர்கள்**

பேராசிரியர் இ. அண்ணாமலை

பேராசிரியர் அ. தாமோதரன்

டாக்டர் தங்க. ஜெயராமன் *(தலைவர், ஆங்கிலத் துறை, அரசு கலைக் கல்லூரி, மன்னார்குடி)*

டாக்டர் டி. கே. கோபாலன் *(இந்திய அயலுறவுப் பணி (ஓய்வு); ஆலோசகர், தரவு ஆய்வு, சென்னை)*

டாக்டர் என். சிவராமன் *(ஆங்கிலத் துறை, தியாகராஜர் கலைக் கல்லூரி, மதுரை)*

நா. ரமணி *(ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர், அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மானாமதுரை)*

**அகராதிப் பணி உதவியாளர்கள்**

ஜெ. மேனகா

பி. கார்த்திகேயன்

## இலங்கைத் தமிழ்

இ. து. குலசிங்கம் *(பருத்தித்துறை, இலங்கை)*

ஞா. ஜெயசீலன் *(ஆங்கிலத் துறை, வவுனியா வளாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை)*

**ஆலோசகர்**

டாக்டர் பா. ரா. சுப்பிரமணியன்

*(முதன்மை ஆசிரியர், க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, முதல் பதிப்பு, செயலர், மொழி அறக்கட்டளை)*

**கணிப்பொறிக் கட்டளைநிரல் உருவாக்கம், ஆலோசனை**

பால்கிருஷ்ண ஈஸ்வரன் *(ஈஸ்வரன் கன்சல்டன்சி சர்வீஸஸ் (பி) லிட், சென்னை)*

**துறை ஆலோசகர்கள்**

பேராசிரியர் கிரிகரி ஜேம்ஸ் (ஆங்கிலம்) *(மொழிகள் துறை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், ஹாங் காங்)*

சுபஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி *(ஆங்கிலம்)*

பேராசிரியர் சி. டி. இந்திரா *(முன்னாள் தலைவர், ஆங்கிலத் துறை, சென்னைப் பல்கலைக்கழகம்)*

பேராசிரியர் து. நரசிம்மன் *(தாவரவியல்) (பேராசிரியர், சென்னை கிறித்தவக் கல்லூரி)*

சி. ஆர். விஜயலட்சுமி *(உயிரியல்) (சில்ரன்ஸ் கார்டன் மேல்நிலைப் பள்ளி, சென்னை)*

டாக்டர் கே. விஜயலட்சுமி, ஏ. வி. பாலசுப்ரமணியன் மற்றும் பணியாளர்கள்

*(இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம், சென்னை)*

டாக்டர் ஆர். பானுமதி *(காட்டுயிர்)*

ஸ்வர்ணம் ஜெ. நடராஜன் *(நீதிபதி, புதுச்சேரி நீதித்துறை)*

அருட்தந்தை ராபின் சே.ச., அருட்தந்தை ராஜ் இருதயா சே.ச.

மற்றும் அருள்கடல் சகோதரர்கள்

எஸ். மஹ்தூம் ஆரிபா *(கிரசண்ட் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் (பெண்கள்), மதுரை)*

ஜெ. வி. ரங்கன் *(சோதிடம்)*; பிரபா நாகராஜன் *(இசை, நாட்டியம்)*;

டாக்டர் ஆர். அலமேலு *(இசை, நாட்டியம்)*

**படங்கள்**

பி. மணிவண்ணன்; ஏ. சி. ராஜசேகர்